மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 02

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. பின்வருவனவற்றுள் ககரம் மாற்றொலியாக அமையும் சொல் எது?
    1. பக்கம் 2. வெட்கம் 3. பாங்கர் 4. ஆக்கம்
02. பின்வருவனவற்றுள் வைபிறேட்டர் ( Vibrator ) என்ற ஆங்கிலச்சொல்லின் தமிழ்க்கலைச்சொல்
    1. அகச்சிவப்பு கதிர்கள் 2. புறஊதாக்கதிர் 3. அதிரி 4. அதிர்வு
03. பின்வருவனவற்றுள் கூட்டுவாக்கியமாக அமையாதது
    1. அப்பாவை பார்க்க நான் கொழும்பு சென்றேன்
    2. நான் கொழும்பு சென்று அப்பாவை பார்த்தேன்
    3. நானும் அப்பாவும் கொழும்பு சென்றோம்
    4. நான் கொழும்பு சென்றேன். ஆனால் அப்பாவை பார்க்கவில்லை
04. பின்வருவனவற்றுள் வடக்குப்பிரதேச கிளைமொழியாய் அமைவது
    1. செத்தை 2. கிறுகி 3. மறுகா 4. அங்கிட்டு
05. பின்வரும் சொற்களுள் பாரசீகமொழிச்சொல்லாக அமையாதது?
    1. சிப்பந்தி 2. துப்பாக்கி 3. லுங்கி 4. வசூல்

பகுதி 2

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக

1. ‘‘நாணாமை நாடாமை நாரின்மை யாதென்றும்
   பேணாமை பேதை தொழில்’’
   i. நாரின்மை என்பதன் பொருள் யாது?
   ii. இக்குறள் இடம்பெறும் அதிகாரத்தின் பெயர் என்ன?
2. ‘‘ஒருமைச்செயலாற்றும் பேதை எழுமையும்
   தான் புக்கு அழுந்தும் அளறு’’ என்ற குறளின் பொருளை எழுதுக
3. ‘‘பொய்படும் ஒன்றோ புனை பூணும் கையறியாப்
   பேதை வினைமேல் கொளின்’’
   i. இக்குறளை கொண்டு கூட்டி மீண்டும் எழுதுக?
   ii. புனை எனப்படுவது யாது?
4. ஏதிலார் ஆர … என்ற குறளை தொடர்ந்து எழுதி முழுமைப்படுத்துக
5. சங்ககாலத்தில் தோன்றிய நூல்களில் அகத்திணை சார்ந்த நூல் ஒன்றினையும் புறத்திணை சார்ந்த நூல் ஒன்றினையும் குறிப்பிடுக
6. ‘‘நான் பாடசாலை சென்றேன்’’. ‘‘நான் பாடசாலையில் அவனை சந்திக்கவில்லை’’ என்ற இருவாக்கியங்களையும் பொருத்தமான இணைப்பிடைச்சொல் கொண்டு இணைத்து எழுதுக?
7. ‘‘கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாஅத்துப் பேதைபுகல்’’ என்ற குறளை சந்திபிரித்தெழுதுக
8. ‘‘மையல் ஒருவன் களித்தற்றால் பேதை தன் கையொன்று உடைமை பெறின்’’ என்ற குறளில் இடம்பெறும் அணியை இனங்கண்டு குறிப்பிடுக.